ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 24.07.2015 |

## நாணயக் கொள்கை மீளாய்வு - 2015 யூலை

2015 யூனில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் வருடாந்த மாற்றங்களின் மூலம் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் முன்னைய மாதத்தின் 0.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 0.1 சதவீதத்தினைப் பதிவு செய்து பூச்சியத்திற்கு அண்மித்த மட்டங்களில் பேணப்படுகிறது. 2015 யூனில் ஆண்டுச் சராசரிப் பணவீக்கமும் முன்னைய மாதத்தின் 1.9 சதவீதத்திலிருந்து 1.7 சதவீதத்திற்கு தொடர்ந்து மெதுவடைந்தது. அதேவேளை, நன்கு கட்டுப்படுத்தப்பட்ட கேள்வி அழுத்தங்களினைக் குறிக்கும் விதத்தில், 2015 யூனில் மையப் பணவீக்கம் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் முன்னைய மாதத்தில் 2.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.8 சதவீதத்தில் குறைந்த மட்டத்தில் பேணப்பட்டது. எரிபொருள் மற்றும் வலு என்பவற்றின் நிர்வகிக்கப்பட்ட விலைகளில் ஏற்பட்ட கீழ்நோக்கிய சீராக்கங்களின் நன்மையினை முக்கியமாகப் பிரதிபலிக்கின்றமையினால் பணவீக்கத்தின் தற்போதைய மட்டம் அடுத்து வரும் சில மாதங்களிலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாணயத் துறையில், தற்போதைய குறைந்த வட்டி வீதச் சூழலினால் உதவப்பட்டு வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கான கொடுகடன் 2015 மேயில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 17.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. உண்மை நியதிகளில், மே மாதம் தனியார் துறைக்கான கொடுகடன் ரூ.48.6 பில்லியனினால் விரிவடைந்ததுடன் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் ஆண்டின் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் ரூ.150 பில்லியனினாலும் விரிவடைந்தது. அரச துறையினால் அதிகரித்த வங்கிக் கடன்பாடுகளுடன் சேர்ந்து தனியார் துறைக்கான கொடுகடனில் தூண்டப்பட்ட விரிவாக்கத்தினால் 2015 மேயில் விரிந்த பணநிரம்பல் ($M_{2b}$) முன்னைய மாதத்தில் பதிவு செய்யப்பட்ட 13.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 15.4 சதவீதத்தினால் அதிகரித்தது.

வெளிநாட்டுத் துறை தொடர்பில், ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த இறக்குமதிகள் மீதான செலவினம் 2015 மேயில் வர்த்தகப் பற்றாக்குறையை விரிவடையச் செய்தது. 2015 மே இறுதியில் ஐ.அ.டொலர் 6.8 பில்லியனாக விளங்கிய மொத்த அலுவலர்சார் ஒதுக்குகள், நாட்டுக்கான

பன்னாட்டு முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறி வழங்கல்களிலிருந்தான வருமானங்களின் பெறுகைகளை அதிகளவில் பிரதிபலிக்கும் வகையில் 2015 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 7.5 பில்லியனுக்கு அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டது. அதேநேரம், சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவலுப்பல்கள் போன்ற ஏனைய சீரான உட்பாய்ச்சல்களும் இக்காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறைக்கு உதவின. 2015 ஏப்பிறலில் இந்திய ஒதுக்கு வங்கியினால் இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கக்கூடியதாகவிருந்த ஐ.அ.டொலர் 400 மில்லியனுக்கு மேலதிகமாக, நாட்டிற்கு மேலும் ஐ.அ.டொலர் 1.1 மில்லியனைப் பெறத்தக்க மற்றுமொரு நாணய பரஸ்பர உடன்படிக்கையினை இலங்கை மத்திய வங்கி 2015 யூலை 17 அன்று இந்திய ஒதுக்கு வங்கியுடன் செய்துள்ளது. இப்புதிய வசதியின் கிடைப்பனவானது நாட்டின் வெளிநாட்டு துறை நிலையின் தாக்குப்பிடிக்கும் தன்மையினை பலப்படுத்திய வேளையில் செலவாணி வீதத்தின் கூடியளவான உறுதிப்பாட்டுக்கு உதவின. ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், இலங்கை ரூபாவிலானது ஐ.அ.டொலருக்கெதிராக ரூ.133.70 இற்கு 2.0 சதவீதத்தால் தேய்வடைந்துள்ளது.

அதேவேளை, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தேசிய கணக்கு புள்ளிவிபரங்களுக்கான அடிப்படை ஆண்டினை 2002 இலிருந்து 2010 இற்கு மாற்றியுள்ள வேளையில் தேசிய கணக்குகளின் ஐக்கிய நாடுகளின் முறைமை 2008 இற்கிணங்க தொகுப்பு முறையினை மேம்படுத்தியுள்ளது. மீள் அடிப்படை தேசிய கணக்கு புள்ளிவிபரங்களின்படி, 2015இன் முதல் காலாண்டுக்கான மொ.உ உற்பத்தியின் உண்மை வளர்ச்சியானது பணிகள் துறையின் உறுதியான செயலாற்றத்துடன் 6.0 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தின் மேற்குறிப்பிட்ட அபிவிருத்திகளை கவனத்தில் கொண்ட நாணயச் சபை 2015 யூலை 23இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் தற்போதைய நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற கருத்தினைக் கொண்டிருக்கிறது. இதன்படி, மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதத்தினையும் முறையே 6.00 சதவீதத்திலும் 7.50 சதவீதத்திலும் மாறாது பேணுவதெனத் தீர்மானித்தது.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்** | **கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 6.00% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 7.50% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 6.00% |